

ஃபெஞ்சல் புயல் நிவாரண நிதியாக ரூபாய் 1 லட்சத்திற்கான காசோலையை நேற்று முன்தினம் தி.மு.கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி வழங்கினார்.



கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் பெஞ்சல் புயல் நிவாரண நிதிக்கு தனது மாத ஊதியத்திலிருந்து ரூபாய் ஒரு லட்சம் பணத்தை வரைவோலையாக துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.



தந்தை பெரியார் நினைவு தினத்தை முன்னிட்டு கழகபொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மன்னார்குடியில் தந்தை பெரியார் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, அவைத்தலைவர் தன்ராஜ், நகரச் செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், தி.க தலைவர் சித்தார்த்தன், ஒன்றியச் செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன், காஞ்சித்துரை, ராஜபூபாலன், அறங்காவல் குழு தலைவர் சி.இளவரசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# ‘அன்பின் இனிய கிறிஸ்துமஸ் பெருவிழாவில்’ – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

நம்முடைய ஆட்சிக் காலத்தில்தான்,

* சிறுபான்மையினர் நல ஆணையம்,
* சிறுபான்மையினர் நலக் குழு,
* தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
* சிறுபான்மையினர் நல இயக்ககம்,
* தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் – என்று ஏராளமானவற்றைத் தொடர்ந்து செய்து வருகிறோம்.

சகோதர உணர்வின் வெளிப்பாடான நிகழ்ச்சி இது!

அந்த வகையில், சகோதர உணர்வின் – ஒற்றுமையின் வெளிப்பாடாக இந்த நிகழ்ச்சியில் பங்கெடுப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**இதுதான் திராவிட மாடல்!**

இந்த மேடையில், போதகர்கள் 75 பேருக்கும், அருட்சகோதரிகள் 30 பேருக்கும் சிறப்பு செய்திருக்கிறோம். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்!

இந்த மேடையைப் பாருங்கள்... பேராயர்களோடு, பேரூர் ஆதினமும் கலந்து கொண்டிருக்கிறார். இந்த விழாவை நடத்துபவர் யார்? நம்முடைய இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள்! இதுதான் சமத்துவ விழா! இந்தச் சமத்துவத்தைப் போற்றுவதும் பாதுகாப்பதும்தான் திராவிட மாடல்! திராவிட மாடல்... திராவிட மாடல் என்றால் என்ன? என்ன? என்று சிலர் கேட்டுக் கொண்டிருக்கிறார்களே... இதுதான் திராவிட மாடல். இப்போதாவது புரிந்து கொள்ளுங்கள்.

மதங்கள் வேறுபட்டிருந்தாலும், மனங்கள் ஒன்றுபட்டு இருக்க வேண்டும்! மனதால் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்! அதுதான் பண்பட்ட – முன்னேறிய சமூகத்துக்கு அடையாளமாக விளங்கிட முடியும்! அப்படிப்பட்ட சமூகமாகத்தான், நம்முடைய தமிழ்ச் சமூகம் விளங்குகிறது! இதற்கு அடித்தளம் போட்டது, நம்முடைய திராவிட இயக்கம்!

நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன்... எந்த மதமாக இருந்தாலும், அது அன்பை போதிக்க வேண்டும்! சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டும்! சக மனிதர்கள் மீது பாகுபாடு காட்டுவதாக இருக்கக் கூடாது!

இந்தியா என்ற பன்முகத்தன்மை கொண்ட நம்முடைய அழகிய நாட்டில், அனைவரும் சமத்துவமாக – ஒற்றுமையாக இருக்க வேண்டும். இதற்கு தடையாக, மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்தி, மக்களின் உணர்வுகளைத் தூண்டி, பிளவுவாத அரசியல் செய்பவர்களுக்குதான் நாங்கள் எதிரிகள்! மற்றபடி, வழிபாடும் – இறையியலும் அவரவர் விருப்பம்! அவரவர் உரிமை!

**பேரறிஞர் அண்ணா – எங்களுக்கு வகுத்துத்தந்த கோட்பாடு!**

நம்மைப் பொருத்தவரைக்கும், பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியதுதான், “ஒன்றே குலம்; ஒருவனே தேவன்!” – “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!”. எனவே, சாதி – மத வேறுபாடுகள், உயர்வு – தாழ்வுகள் மறைந்து, சமத்துவமும் ஒற்றுமையும் – மத நல்லிணக்கமும், மனித நல்லிணக்கமும் முதன்மையாக விளங்கினால், உலக அரங்கில் நம்முடைய நாடு மிகப்பெரிய உயரத்தை அடையும்! அதற்கான அன்பையும் அமைதியையும்தான் இதுபோன்ற விழாக்கள் விதைக்கின்றன.

அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்து மக்கள் வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி – என்று பாடுபட்டு வரும் நம்முடைய திராவிட மாடல் அரசில், சிறுபான்மையினர் நலனுக்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் முத்தாய்ப்பான சிலவற்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். அதை நம்முடைய ஆணையத் துணைத் தலைவர் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார். இருந்தாலும், நான் உங்களுக்கு மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அவர் தலைப்புச் செய்தியாக சொன்னார். நான் புள்ளி விவரங்களோடு சொல்ல விரும்புகிறேன்.

**ஜெருசேலம் புனிதப் பயணம்! மானியத்தை உயர்த்தி ஆணை!**

* ஜெருசலேம் புனிதப் பயணம் செல்வதற்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தில், இப்போது ஒரு பயனாளிக்கு நிதி உதவியாக 37 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு இந்தத் திட்டத்தில் 600 பயனாளிகள் பயனடைகிறார்கள். இதில் 50 இடங்களை, கன்னியாஸ்திரிகளுக்கும், அருட்சகோதரிகளுக்கும் ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

அருட்சகோதரிகள் – கன்னியாஸ்திரிகளுக்கான இந்த மானியம், 37 ஆயிரம் ரூபாயிலிருந்து 60 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்தோம். அதன்படி, இதுவரைக்கும், 8 கோடியே 25 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் 4,128 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு இந்த மானியத்தைப் பயனாளிகளுக்கு நேரடியாக வழங்கும் திட்டமாக மாற்றி ஆணையிட்டிருக்கிறோம்.

* தமிழ்நாட்டில் இருக்கும் கிறித்துவத் தேவாலயங்களை புனரமைக்கவும், பழுது நீக்கவும் வழங்கப்படும் மானிய உதவித் திட்டத்தில் இதுவரைக்கும், 37 கிறித்துவத் தேவாலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக ஒரு கோடியே 61 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

தொன்மை வாய்ந்த தேவாலயங்களைப் புனரமைக்கும் திட்டத்தின்கீழ், 2023-24, 2024-25 ஆண்டுகளில் தலா 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 8 தொன்மை வாய்ந்த தேவாலயங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

பள்ளி வாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்பு நிறுவனங்களைப் பழுது பார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் ஆண்டுதோறும் வழங்கப்படும் மானியத்தை உயர்த்தியிருக்கிறோம்.

இந்த 2024-25-ஆம் ஆண்டு மட்டும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம், 5,046 பயனாளிகளுக்கு 36 கோடியே 44 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

* சிறுபான்மை வகுப்பைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள மாணவ – மாணவியர் தங்களின் கல்வியினை தொடர்ந்து பயில்வதற்கு ஏதுவாக, ஏற்கனவே செயல்பட்டு வரும் 17 இலவச உண்டி உறைவிட விடுதிகளுடன், புதிதாக 3 விடுதிகள் தொடங்கப்பட்டிருக்கிறது.

* முஸ்லிம் உதவிச் சங்கங்களும், கிறிஸ்துவ உதவி சங்கங்களும் கூடுதலாகத் துவங்கப்பட்டிருக்கிறது.

* 2023-ஆம் ஆண்டிலிருந்து இதுவரை, 56 கல்வி நிறுவனங்களுக்கு மொழிவாரிச் சிறுபான்மை அந்தஸ்தும், 103 கல்வி நிறுவனங்களுக்கு மதச்சார்பு சிறுபான்மை அந்தஸ்தும் வழங்கப்பட்டிருக்கிறது.

பதிவு பெற்ற வக்பு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

**சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் – கழக அரசில் நலத்திட்டங்கள்!**

இவ்வாறு, சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல, பட்டியலின – பழங்குடியின மக்கள், பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், உழவர்கள், நெசவாளர்கள், உழைப்பாளர்கள், மகளிர், மாணவர்கள், குழந்தைகள், பாட்டாளித் தோழர்கள் என்று சமூகத்தின் அனைத்துத் தரப்பட்ட மக்களுக்கும் பார்த்துப் பார்த்து நலத் திட்டங்கள் இந்த அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது!

நாள்தோறும் நலத் திட்டங்கள், திறப்பு விழாக்கள் – தொடக்க விழாக்கள் என்று மக்களுக்கான அரசாகச் செயல்படுவதால்தான், மக்களாகிய நீங்களும் எங்களுக்குத் தொடர்ந்து வெற்றியைக் கொடுக்கிறீர்கள்.

திட்டங்களை வழங்குவதோடு – அனைத்து மக்களுக்குமான பாதுகாப்பு அரணாக திராவிட முன்னேற்றக் கழகம் செயல்பட்டு வருகிறது என்பதை நம்முடைய இனிகோ அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார்! மற்றவர்களும் அதை நினைவுபடுத்தி இருக்கிறார்கள். குறிப்பாக, சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்க இந்த அரசு உறுதியோடு செயல்பட்டு வருகிறது.

இன்றைக்கு ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசு, சிறுபான்மை மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் அரசாக இருக்கிறது. சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளை எல்லாம் நான் விரிவாக விவரிக்க வேண்டிய அவசியமில்லை.

அந்தக் கொடுமைகளை எதிர்க்கும் – தடுக்கும் காவல் அரணாக தி.மு.க. தொடர்ந்து செயல்படும் என்ற உறுதியை இந்த நேரத்தில் வழங்குகிறேன்.

சிறுபான்மை மக்களை அச்சுறுத்தும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக வலிமையான போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தியது, தி.மு.க! ஆனால், அந்தச் சட்டத்துக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களித்த கட்சி, அ.தி.மு.க! இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் பழனிசாமி அவர்கள், அதற்கு ஆதரவாக எப்படியெல்லாம் பேசினார் என்று உங்களுக்கு நினைவிருக்கும்.

**அரசியலமைப்புச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் பா.ஜ.க.!**

ஒன்றிய பா.ஜ.க. அரசைப் பொருத்தவரைக்கும், மதச்சார்பின்மை என்ற சொல்லையே அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்கத் துடிக்கிறார்கள். அந்தச் சொல்லை நீக்க முடியவில்லை என்றால், அரசியலமைப்புச் சட்டத்தையே நீர்த்துப் போக வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சமூக நல்லிணக்கத்தின் அடையாளமாக திகழும் அண்ணல் காந்தியடிகளின் படத்தை – சம உரிமைத் தத்துவத்தின் அடையாளமாக இருக்கும் புரட்சியாளர் அம்பேத்கர் படத்தை – நாடாளுமன்ற அமைச்சகமே புறக்கணிக்கும் அளவிற்கு மதவாதம் ஒன்றியத்தில் ஆட்சி செலுத்துகிறது.

**பிளவுவாத சக்திகளுக்கு ஒருபோதும் இடமில்லை!**

நல்லிணக்க இந்தியாவில் இப்படிப்பட்ட பிளவுவாத சக்திகளுக்கு ஒருபோதும் இடமில்லை. அதனால்தான், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் பா.ஜ.க.வுக்குப் பெரும்பான்மை பலத்தை அளிக்கவில்லை. ஆனாலும் அவர்கள் திருந்தவில்லை! அதுதான் வருத்தமாக இருக்கிறது.

ஆனால், மக்களின் ஒற்றுமை – ஜனநாயகச் சக்திகளின் அணித் திரட்சி அவர்களுக்குக் கடிவாளம் போட்டிருக்கிறது. அதனால், “ஒரே நாடு – ஒரே தேர்தல்” என்று சொல்லி, ஒற்றுமை இந்தியாவைச் சிதைத்து, ஒற்றை இந்தியாவை உருவாக்கப் பார்க்கிறார்கள்.

**மக்கள் பற்று – நாட்டுப் பற்று!**

“ஒற்றை மதம் – ஒற்றை மொழி – ஒற்றைப் பண்பாடு” ஆகியவற்றின் தொடர்ச்சியாக, “ஒரே கட்சி – ஒரே தலைவர்” என்ற ஒற்றை எதேச்சாதிகார முடிவை உருவாக்க நினைக்கிறார்கள். ஆனால், மக்கள் பற்றும் – நாட்டுப் பற்றும் உள்ள ஒவ்வொரு இந்தியரும் இதற்கு எதிராக இருப்பார்கள்.

நாடு நல்லவர்களின் கைகளில் பாதுகாப்பாக இருக்கும்! அனைத்து மக்களும் ஒற்றுமையாக – சமத்துவமாக வாழும்நாள் நிச்சயம் விடியும்! சிறுபான்மையினர் உரிமைக்காக திராவிட முன்னேற்றக் கழகம் எந்தவிதச் சமரசமும் இல்லாமல் போராடும் என்ற உறுதியை நான் மீண்டும் அளிக்கிறேன்.

“உங்கள் செயல் அனைத்தும் அன்புமயமாக இருக்க வேண்டும்! உங்கள் மீது அன்பாக இருப்பதைப் போலவே அடுத்தவர் மீதும் அன்பாக இருங்கள்!” – என்ற இயேசு பெருமானின் மொழிகளைச் சொல்லி, அனைவருக்கும் மீண்டும் என் அன்பான கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைச் சொல்லி விடை பெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

**மக்களாட்சி தனது மிகப்பெரும் அச்சுறுத்தலை ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் இருந்து எதிர்நோக்கியுள்ளது.**

**குறிப்பிட்ட வாக்குச்சாவடியின் சி.சி.டி.வி. காட்சிப் பதிவுகளை வழங்குமாறு பஞ்சாப் – மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அடுத்து, சி.சி.டி.வி. பதிவுகள் மற்றும் தேர்தல் தொடர்பான பிற ஆவணங்கள் பொது ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் ஒன்றிய அரசானது இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. இதன் மூலம், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையான கூறுகளுள் ஒன்றினை அழித்துள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் பயம் ஹரியானா மாநிலத் தேர்தலோடு நிற்கவில்லை, அண்மையில் மகாராஷ்டிர மாநிலத்தில் அவர்கள் தேர்தலின் புனிதத்தன்மையைக் கெடுத்துப் பெற்ற பொய்யான வெற்றி தீவிரமான எதிர்ப்புக்கு ஆளாகியிருப்பதால் அடைந்துள்ள பதற்றத்தின் எதிரொலிப்பாகவே இது அமைந்துள்ளது.**

**தனது அமைப்பின் சுதந்திரத்துக்காகப் போராடுவதற்குப் பதிலாகத் தேர்தல் ஆணையமும் பிரதமர் மோடி அவர்கள் தலைமை யிலான அரசின் அழுத்தத்துக்கு மனமுவந்து பணிந்திருப்பதும், நேர்மையான – நியாயமான தேர்தல் எனும் தனது குழந்தையையே அது உருக்குலைத்திருப்பதும் அதிர்ச்சியளிக்கிறது.**

**நம் நாட்டில் சுதந்திரமான – நியாயமான தேர்தல்கள் நடைபெறுவதன் மீது தொடுக்கப்பட்டுள்ள மக்களாட்சிக்கு விரோதமான இந்தத் தாக்குதலை எதிர்க்க பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் உட்பட அனைத்து அரசியல் கட்சி களும் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## விழுப்புரம் மாவட்டம் – மரக்காணம் அருகில் மீன்பிடிக்கும் பொழுது

# கழுவெளியில் தவறிவிழுந்து உயிரிழந்தோர் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

*சென்னை, டிச.25 -*

*விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அருகில் மீன்பிடிக்கும் பொழுது கழுவெளியில் தவறிவிழுந்து உயிரிழந்தவர்களின் பெற்றோருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிதியுதவி அறிவித்துள்ளார்.*

*முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-*

*விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், மரக்காணம் (தெற்கு) கிராமம் சந்தைத் தோப்புத் தெருவைச் சேர்ந்த லோகு (எ) லோகேஷ், த/பெ சுரேஷ் (வயது 24) என்பவர் கடந்த 22.12.2024 அன்று இரவு சுமார் 07.00 மணியளவில் மரக்காணம் அருகே உள்ள கழுவெளியில் மீன் பிடிக்கும்போது எதிர்பாராத விதமாக கழுவெளியில் தவறி விழுந்து விட்டார்.’*

*அவருடன் மீன்பிடிக்க வந்த அவருடைய இரண்டு சகோதரர்களான விக்ரம் (வயது 20) மற்றும் சூர்யா (வயது 20) ஆகியோர் அவரை தேடும் பொழுது, அவர்களும் கழுவெளியில் இழுத்துச் செல்லப் பட்டுள்ளனர். இவர்கள் மூவரையும் கழுவெளியில் தேடப் பட்டு வந்த நிலையில் நேற்று (23.12.2024) மூவரும் தீயணைப்புத் துறையினரால் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர் என்ற துயரமான செய்தியினை அறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.*

*இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவராண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.*

*இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.*





பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51 வது நினைவு நாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன். கௌதமசிகாமணி தலைமையில் விழுப்புரம் நகர கழக அலுவலகத்தில் இருந்து அமைதிப் பேரணியாகச் சென்று அவரின் சிலைக்கு வனத்துறை அமைச்சர் முனைவர் பொன்முடி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ , மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா.கற்பகம் , தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம். தேன்மொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கோ.பாஸ்கரன், அப்துல் சலாம், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, பொதுக்குழு உறுப்பினர் பஞ்சநாதன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



அகில இந்திய பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி, மல்லர் கம்பம் பிரிவில் விழுப்புரத்தைச் சேர்ந்த மணி தர்ஷன் முதல் முறையாக தமிழ்நாட்டிற்கு வெள்ளிப் பதக்கத்தை பெற்றுத் தந்துள்ளார். மேலும் குழு போட்டியில் அனைத்துப் பிரிவிலும் மூன்றாம் இடம் பெற்ற வீரர் , வீராங்கனைகள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணியைச் சந்தித்து வாழ்த்துக்களை பெற்றார். அனைத்து விளையாட்டு கழகங்களின் ஒருங்கிணைப்பாளர் வாலிபால் மணி, தமிழ்நாடு மல்லர் கம்பம் செயலாளர் துரை.செந்தில்குமார், தமிழ்நாடு அணி பயிற்சியாளர்கள் மல்லன் ஆதித்தியன், யாழினி, பவித்ரா அரியாஷினி, லோகேஸ்வரன், நந்தகுமார், திவாகர், பிரியதர்ஷின் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திருவாரூர் ஊராட்சி ஒன்றிய புதிய அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றியக் குழுத் தலைவர் புலிவலம் ஏ.தேவா, மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, நகர்மன்றத் தலைவர் புவனப்ரியா செந்தில், துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர் மற்றும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் உள்ளனர்.